DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 51/2022 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஏனோக் ஜான்சன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை **(ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. Accident Register & Wound Certificate **(ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. M.V.I Report TN 63 AR 8812 இருசக்கர வாகனம் M.V.I Report TN 63 AR 7966 TATA Indica Car **(ம.சா.ஆ. 3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பார்வை மகஜர் **(ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. வரைபடம் **(ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6.குற்ற இறுதி அறிக்கை **(ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7.Judgment **(ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8.Discharge summary (Multicare Hospital) D.O.A 28.01.2021 to D.O.D 13.02.2021 **(ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

9.Discharge summary (Multicare Hospital) D.O.A 21.03.2021 to D.O.D 28.03.2021 **(ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

10.Discharge summary (Ganga Hospital) D.O.A 18.07.2021 to D.O.D 22.07.2021 **(ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

11.Discharge summary (Ganga Hospital) D.O.A 03.09.2021 to D.O.D 09.09.2021 **(ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

12.Discharge summary (Sri Ramachandra Hospital) D.O.A 04.04.2022 to D.O.D 05.05.2022 **(ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

13.Discharge summary (Sri Ramachandra Hospital) D.O.A 27.05.2022 to D.O.D 18.06.2022 (ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

14.Discharge summary (Sri Ramachandra Hospital) D.O.A 27.07.2022 to D.O.D 10.08.2022 (ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

15.ரூ.6,42,053/-ற்கான CONSOLIDATED BILLS (ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

16.ரூ.38,926/-ற்கான Multicare hospital Medicine Bills **(ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

17.ரூ.42,609/-ற்கான Ganga hospital Medicine Bills **(ம.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

18.ரூ.20,483/-ற்கான outside pharmacy Bills **(ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

19.Certificate of Mechnical auto cadd **(ம.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்த சாலை Y வளைவுள்ள சாலை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் எங்கிருந்து எங்கு சென்றேன் என்றால் கோவிலூரிலிருந்து செட்டிநாடு சென்றேன். விபத்து நடந்த சாலை தெற்கிலிருந்து வடக்காக செல்லும் சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரத்தில் இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற சந்தோஷ் என் உறவினர் என்றால் சரிதான், என் சித்தப்பா மகன் ஆவார். விபத்து நடந்த சமயத்தில் சந்தோஷ்-ற்கு என்ன வயது என்றால் 18 வயது ஆகும்.

2. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய சந்தோஷ்-ற்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. அவரது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீட்டு சான்றிதழ் இல்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. விபத்து ஏற்பட்ட Y வளைவு சாலையில், இருசாலைகளும் சந்திக்கும் மத்திய பகுதியில்தான் விபத்து நடந்தது என்றால் சரிதான்.

3. விபத்து நடந்த சாலையில் தெற்கிலிருந்து வடக்காக செல்லும் சாலையில் செல்லும் வாகனங்கள் சாலையின் மேற்குப்புறத்தில் இடதுபுறமாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அதுபோல வடக்கிலிருந்து தெற்காக செல்லும் சாலையில் கிழக்குபுறத்தில் இடதுபுறமாகத்தான் வரவேண்டும் என்றால் சரிதான். விபத்து பகுதியில் Y வளைவு உள்ள சாலையில், சாலை வளைவாக இருக்கும் என்றால் சரிதான். விபத்து

ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காரை ஓட்டிய ஓட்டுநர் வடக்கிலிருந்து தெற்காக வரும் சாலையில் சாலையின் இடதுபுறமாகத்தான் வந்தார் என்றால் சரிதான்.

4. நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து சாலையின் கிழக்குபுறத்தில்தான் நடந்தது என்றால் சரிதான். வடக்கிலிருந்து தெற்காக வந்துகொண்டிருந்த கார் ஓட்டுநர் சாலையின் இடதுபுறமாகத்தான் வந்து கொண்டிருந்தார் என்றும், நான் சென்ற வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் எவ்வித சமிக்ஞையுமின்றி வலதுபுறமாக ஏறிச்சென்று எதிரே வந்த காரின் மீது மோதியதால்தான் விபத்து ஏற்பட்டு என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காரை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் முறையாக சாலை விதிகளை கடைப்பிடித்து வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றும், நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநர் வாகனத்தை முறையாக ஓட்டாமலும், கவனக்குறைவாக ஓட்டிச்சென்று விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால்தான் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. நான் மெக்கானிக்கல் படிப்பு பாலிடெக்கினிக்கில் எத்தனை வருடம் படித்தேன் என்றால் 3 வருடம் படித்தேன். விபத்து சமயத்தில் நான் படித்து முடித்துவிட்டேனா என்றால் இல்லை படித்துக்கொண்டிருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.19 ஆவணம் எத்தனை மாத படிப்பு என்றால் 6 மாத படிப்பு ஆகும். நான் பாலிடெக்னிக் படித்தற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பாலிடெக்னிக் படித்திருந்தால் அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அதனை படிக்காததால் தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் மெக்கானிக்கல் தொழில் செய்து மற்றும் கீபோர்ட் கருவி வாசித்து வருமானம் ஈட்டி வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் 10.08.2022 தேதி ராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்து கடைசியாக விடுவிக்கப்பட்டபிறகு எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது எனக்குத் தேவைப்படுவதால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது நான் தொடர் சிகிச்சை எதுவும் எடுத்துவரவில்லை என்றும், அவ்வாறு எடுத்துவந்திருந்தால் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமாகிவிட்டது என்றும், எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நி.ம.சா.ஆ.1 ஆவணமான ஊனச்சான்றிதழில் எனக்கு ஏற்பட்ட ஊனமானது தற்காலிகமானது என கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், எனினும் நான் தற்போதுவரை சிகிச்சையில் தான் உள்ளேன்.

7. நான் பல்வேறு தலைப்பின்கீழ் இழப்பீட்டுத் தொகையை மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்ததால் எனக்கு எவ்விதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**(3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் செய்த குறுக்குவிசாரணை 1, 2 எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.